**செய்தி வெளியீடு எண் : 2057** **நாள் : 12.10.2023**

**செய்திவெளியீடு**

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணிபுரிந்தவர்கள் / நிறுவனங்களுக்கு கீழ்க்காணும் மாநில விருதுகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 3.12.2023 அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று வழங்கப்படவுள்ளது.

| வ.எண் | விருதுகள் விவரம் | எண்ணிக்கை | விருது விவரம் |
|---|---|---|---|
| 1 | **சிறந்த பணியாளர் / சுயதொழில் புரிபவர்**<br>1. **கை, கால் பாதிக்கப்பட்டோர்** (LD) **அல்லது தொழுநோயிலிருந்து குணமடைந்தோர்** (LC), 2.**பார்வை திறன் பாதிக்கப்பட்டோர்**(VI),<br>3. **செவித் திறன் பாதிக்கப்பட்டோர்**(HI), 4.**அறிவுசார் குறையுடையோர்** (ID), 5. **பேச்சு மற்றும் மொழித்திறன் குறைபாடு** (SpLaD),<br>6. Developmental Disorder (**புறவுலக சிந்தனையற்றோர்**(ASD), **குறிப்பிட்ட கற்றலில் குறைபாடு** (SLD)], 7. **மன நோய்** (MI),<br>8. Disability caused due to blood disorder<br>**இரத்த உறையாமை அல்லது இரத்த ஒழுகு குறைபாடு** (He), **இரத்த அழிவுச்சோகை** (Th), **அரிவாளனு இரத்தச் சோகை** (SCD)],<br>9. **நாள்பட்ட நரம்பியல் பாதிப்பு ஸதிசு பண்முகக் கடினமாதல்** (MS), **நடுக்கு வாதம்** (PD)], 10.**பல்வகை குறைபாடு** [Multiple Disabilities(MD)] | 10 **விருதுகள்** | 10 **கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்** |
| 2 | **சிறந்த ஆசிரியர் – (பார்வைத் திறன் பாதிக்கப்பட்டோருக்கு கற்பித்தல், செவித் திறன் பாதிக்கப்பட்டோருக்கு கற்பித்தல், மற்றும் அறிவுசார்குறையுடையோருக்கு கற்பித்தல்)** | 3 **விருதுகள்** | 10 **கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்** |
| 3 | **சிறந்த சமூகப் பணியாளர்** | 1 **விருது** | 10 **கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்** |
| 4 | **மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம்** | 1 **விருது** | 10 **கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும்** |

| | | | |
|---|---|---|---|
| | | | **சான்றிதழ்** |
| 5 | **மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய சிறந்த நிறுவனம்** | **1 விருது** | **10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்** |
| 6 | **ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர் (செவித் திறன் குறைந்தோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர் மற்றும் அறிவுசார் குறையுடையோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்)** | **2 விருதுகள்** | **10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்** |
| 7 | **மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனர்** | **2 விருதுகள்** | **10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்** |
| 8 | **பொதுக் கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான தடையற்ற கட்டமைப்புகளை ஏற்படுத்தியுள்ள சிறந்த அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள்** | **2 விருதுகள்** | |
| | **மொத்தம்** | **22 விருதுகள்** | |

மேற்காணும் விருதுகளுக்கான விண்ணப்பப் படிவங்களை, மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம், எண்.5, லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம், காமராஜர் சாலை, சென்னை – 5 அல்லது சம்மந்தப்பட்ட மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் அவர்களிடமிருந்து பெற்று, அல்லது இத்துறையின் www.scd.tn.gov.in என்ற வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்து, அவ்விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து அனைத்து சான்றிதழ்களுடன் **25.10.2023 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள்** சம்மந்தப்பட்ட மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் அவர்களிடம் நேரிலோ அல்லது தபால் மூலமோ சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டு கொள்ளப்படுகிறது. மேலும், விண்ணப்பங்களை “ https://awards.tn.gov.in ” என்ற வலைத்தளத்திலும் **25.10.2023 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள்** பதிவேற்றம் செய்யலாம். **மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரின் பரிந்துரை இல்லாத விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.**

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in